## கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2017

கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வள அதிகாரச் சட்டத்தின் பத்தாவது பகுதியின் 59(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் நிதிச்செயலாற்றல் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பதின்மூன்று மாவட்டக் கடற்றொழில் அலுவலகங்களால் கைப்பற்றப்பட்டு சட்டபூர்வ நடவடிக்கைகள் முடியும் வரை நீதிமன்றங்களிலும் கடற்படையினதும் பொறுப்பில் உள்ள நிதியத்தின் சொத்துக்களாக இனங்காணப்படக்கூடிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல்களைக் கணக்கிலிடுவதற்கான கொள்கையொன்றை இனங்கண்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டின்போது சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலம் 427 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. எனினும், அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டிய வெகுமதித் தொகை கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் பொருட்டு கடற்றொழில் வெகுமதி நிதியம் பறிமுதல் செய்த பொருட்கள் மற்றும் மீன் விற்பனை மூலம் ரூபா 636,009 கூட்டுத் தொகை வருமானமாகக் கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிடப்பட்டபோதும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நிதியத்தின் வருமானமாக ரூபா 344,465 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது அதற்கமைய, ரூபா 291,544 க்கான விளக்கமளிக்கப்படாத வேறுபாடு நிலவியது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

நிதி நிலைமைக் கூற்றில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காசு மீதியாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 3,305,947 மீதியை உறுதி செய்வதற்கான மீதிச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், கொடுக்கல் வாங்கல்களைக் குறிக்கும் பெயரளவுக் கணக்கு மாத்திரமே கடற்றொழில் மற்றும் நீரியல்வளப் பணிப்பாளர் நாயகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுகளில் காணப்படும் ரூபா 1,540,073 பெற வேண்டிய மீன் விற்பனை வருமானத்தில் 86.2 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 1,327,598 தொகையானது 2016 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே பெற வேண்டியிருந்த மீன் விற்பனை வருமானமாகும். மீளாய்வாண்டின்போது 2016 ஆம் ஆண்டினது வருமான நிலுவையில் ரூபா 14,330 மாத்திரமே அறவிடப்பட்டமையால் வருமான நிலுவை அறவிடப்படுவது நலிவடைந்த நிலையில் இருந்தது.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் வழக்குகள் தொடர்பான பொருட்களை விற்பனை செய்து பெற்றதால் வெகுமதி நிதியத்திற்கு 2016 யூன் 20 ஆம் திகதி கிடைக்க பெற்ற ரூபா 2,725,000 இன் 25 சதவீதமாகிய ரூபா 681,250 திரட்டு நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி 2017 டிசெம்பர் 12 ஆகும்.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 344,465 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,253,095 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 908,630 நலிவு ஏற்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின்போது சுற்றிவளைப்புகள் தொடர்பாகப் பல்கேற்ற உத்தியோகத்தர்களுக்கு ரூபா3,468,750 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், மீளாய்வாண்டின்போது அவ்வாறு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமை மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானத்தில் ஏற்பட்ட ரூபா 4,377,380 குறைவு என்பன மேற்படி நலிவுக்குக் காரணமாகின.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வள அதிகாரச் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம், வெகுமதி நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாகப் பணிப்பாளர் பொறுப்புக் கூற வேண்டியவர் ஆவார். எனினும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் 2016,2017 ஆம் ஆண்டுகளுக்கெனத் தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டங்களில் வெகுமதி நிதியத்தின் பணிகளை இனங்கண்டு ஆக்கபூர்வமாக அவற்றை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

சட்டப் பிரிவு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம், சுற்றிவளைப்புகளில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதித் தொகை தாமதமின்றி வழங்கப்பட வேண்டுமாயினும், 2014,2015,2016,2017 ஆம் ஆண்டுகளில் முறையே 271,348,488,427 வழக்குகள் தொடரப்பட்டிருந்தபோதும், 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட 05 வழக்குகளின் பொருட்டு புத்தளம் மாவட்டத்தின் 64 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே ரூபா 3,826,125 வெகுமதிப் பணம் வழங்கப்பட்டிருந்தது. 2014 ஆம் 2017 ஆம் ஆண்டுகளின் பொருட்டு பணம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, உத்தியோகத்தர்களுக்கு வெகுமதித் தொகையை வழங்குவதில் குறிப்பான விதி முறைகள் தயாரிக்கப்படாமையால் சட்டவிரோத நடவடிக்கைகளின்போது சுற்றி வளைப்புகளில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுவது ஊக்குவிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழிலி மற்றும் நீரியல்வள அதிகாரச்சட்டத்தின் 59(4) உப பிரிவின் பிரகாரம், உத்தியோகத்தர்களுக்கும் தகவல்கள் வழங்குபவர்களுக்கும் அவ்வப்போது பணிப்பாளரால் கருதப்படும் ஏதாவது தொகை வெகுமதி நிதியத்திலிருந்து வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், தகவல் வழங்குபவர்களுக்கு பெறுமதி வழங்கும் விதி முறைகள் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) மாவட்ட கடற்றொழில் அலுவலகம் சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதன் மூலம் நீதிமன்றத்தால் கடற்றொழில் பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் தண்டப்பணமாக ரூபா 1,890,800 மீளாய்வாண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு அறவிடப்படும் தண்டப்பணத்தில் எச்சவீதமும் கடற்றொழில் வெகுமதி நிதியத்தை வந்தடைவதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அதிகாரச் சட்ட விடயங்கள் திருத்தஞ்செய்யப்படாமையால் அத் தண்டப்பணத்தில் ஒரு பகுதி கடற்றொழில் பெறுமதியை நிதியம் பெறப்படமுடியாமல் போனது.

(இ) சுற்றிவளைப்பு தொடர்பான தகவல் பதிவேடு பேணப்படாமையால், 2017 ஆம் ஆண்டில் சட்டவீரோத கடற்றொழில் நடவடிக்கைகள் சம்பந்தமாக திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தொடர்பாக அறிந்து கொள்ளமுடியாமல் போனது. இது தொடர்பாக 2015,2016 ஆம் ஆண்டுகள் தொடக்கம் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் அறிவித்திருந்தும், அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தால் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் சம்பந்தமான வழக்கு அறிக்கைகளைப் பெறுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டபோதும், அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 133(i) ஆம் நிதிப் பிரமாணம் மற்றும் 2011 டிசெம்பர் 23 ஆந் திகதிய டீஎம்ஏ/06 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கைப் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் நிதி நடவடிக்கைகளும் செயலாற்றலும் தொடர்பாக உள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில் கலந்து கொண்டு அந்நடவடிக்கைகளின் சரி, பிழை, மோசடிகள் என்பவற்றைத் தவிர்ப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு ஈடுபட வேண்டுமாயினும், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வெகுமதி நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | ஏடுகளைப் பேணுதல் | சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் சம்பந்தமாகத் திணைக்களம் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளை அறிந்து கொள்வதற்கான சுற்றிவளைப்புத் தகவல் பதிவேடு பேணப்படாமை. |
| (ஆ) | உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி வழங்குதல் | வெகுமதி நிதியக கொடுப்பனவு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான விதிமுறைகள் தயாரிக்கப்படாமை. |
| (இ) | நிதிக்கட்டுப்பாடு | வருமான நிலுவை அறவிடப்படுவது மிகவும் நலிவடைந்திருந்தது. |